அந்த அளவுக்கு அமர்த்தி, அவர்கள் வேலைகளை நிரந்தரமாக்கு வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலை வர் அவர்களே, இங்கே இருக்கின்ற கேள்வி கிராம்புத் தோட்டத் தில் பெண் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றார் களா என்பது. அதைப் பற்றிய தகவல் என்னிடத்திலே இருக் கிறது ; பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன். பொதுவாக, தோட் டங்களில் பெண் தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு வேலை அளிக்கப்படுகின்றது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டு மென்றால், தனியாக கேள்வி எழுப்பினால், விவரமான தகவல் களைச் சேகரித்துத் தர முடியும்.

கொடைரோடில் சுற்றுலா மாளிகை.

வினா எண் 306—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் கொடைக்கானலுக்கு அதிகமாக வெளிநாட்டுக்காரர்கள் வருகின்ற காரணத்தால் கொடைரோடு ரயில்வே ஸ்டேஷனை ஒட்டி சுற்றுலா மாளிகை ஏற்படுத்த அர சிற்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் எப்போது அமுல் நடத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) மற்றும் (ஆ). தற்சமயம் இல்லை

திருமதி. ஏ. எஸ் பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அயல் நாடுகளிலே இருந்து வரக்கூடியவர்கள், ரயிலை விட்டு இறங்கியதும், குடிப்பதற்கு தண்ணீர் இல்லை; காபி அருந்துவதற்கும் முடியவில்லை. 2 மணி நேரம் களைப்பாறு வதற்கு வாய்ப்பும் இல்லை என்ற காரணத்தினால், தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது இல்லையென்றாலும் மீண்டும் இதை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, ரயில்வே ஸ்டேஷனுக்கும், டி. பீ.-க்கும் எதிரே சிறிய அழகான மலை ஒன்றிருக்கிறது, அது புறம்டோக்கு நிலம், அதிலே ஒரு ஏக்கர் நிலத்திலே சுற்றுலா மாளிகை அமைத்து, வரக்கூடியவர்களுக்கு நல்ல வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு இந்த அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1981 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கொடைக்கானல் ரயில் நிலையத்தைப் பொறுத்தவரை, அங்கே இறங்கியவுடன் எல்லோருமே கொடைக்கானல், மலைக்குச் சென்று விடுகிறார்கள் என்ற விவரம்தான் இருக்கிறது. அங்கே இப்படிப்பட்ட ஒரு தங்கும் விடுதியை ஏற்படுத்தினால், தக்க வருமானம் கிடைக்குமா என்பது ஆராயப்படவேண்டிய ஒன்று. என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குத் தெரிவித்து, சாலை ஓர தங்கும் விடுதிகள் ஆங்காங்கே ஹோட்டல்கள் கட்டுவதைப்போல் கட்டினால் பலன் அளிக்குமா என்பதைப் பரிசீலிக்கும்படி அரசு கேட்டுக் கொள்ளும்.

மருதமலைக் கோயில்.

*வினா எண் 307— திரு. மா. சின்னராஜ்: மாண்புமிகு செய்தி-அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கு அருகிலுள்ள மருதமலைக் கோவில் ஆண்டு வருமானம் (கடந்த மூன்று ஆண்டுகள்) எவ்வளவு ?

(ஆ) இந்தக் கோவில் மூலம் என்ன சமுதாய கல்விப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ?

(இ) இவற்றிற்காக செலவிடப்படும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆலயத்தின் கடந்த மூன்று ஆண்டுகள் வரி விதிப்புக்கு உட்பட்ட வருமானம் பசலி 1387 (1977-78) ரூ. 7,39,100, பசலி 1388 (1978-79) ரூ. 8,60,895, பசலி 1389 (1979-80) ரூ. 10,46,912.

(ஆ) இந்த ஆலயத்தின் சார்பாக சமுதாய நலப்பணிகளுக்காக மாணவ மாணவியருக்கான உயர் நிலைப் பள்ளி ஒன்றும், சித்த வைத்திய சாலை ஒன்றும், அன்பு இல்லம் ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றன.

(இ) இவற்றிற்காக 1389-ம் பசலியில் (1979-80) செலவிடப்பட்ட தொகை ரூ. 70,143 ஆகும்.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயிலிலே கிடைக்கும் வருமானத்தை கொண்டு அங்கே ஒரு சுற்றுலா மாளிகையை ஏற்படுத்த அரசு முன்வருமா? அல்லது அங்கே பணியாற்றக் கூடிய ஊழியர்களுக்கும் அல்லது தங்க வருகின்ற மற்றவர்களுக்கும் விடுதிகள் கட்டுவதற்கு அல்லது குறைந்த வாடகையில் வீடுகள் கட்டுவதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்?